**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X



# The Qualities of Women in Sangam Literature

**Mr. A. Arun Bejo**, Research Scholar of Tamil, S.T. Hindu College, Nagercoil,
Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0170-7230**
**Dr. P. M. Jayakala**, Associate Professor of Tamil, S.T.Hindu College, Nagercoil,
Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**
**DOI: 10.5281/zenodo.14744443**

## Abstract

*Literature is created for the betterment of human society. Although literature originates from human life, it serves as a guide for man to live a perfect life. If literature is a reflection of life, then Sangam literature is a reflection of a better Tamil society. In addition, it highlights the leadership qualities that a person should follow at every stage of his life. Literature plays an important role in helping a person to live as a human being by transcending caste and religious differences and giving guidance and hope to humanity. In this way, literature contains the personality thoughts that create human values that are the basis for the development of humanity. Since Sangam literature has recorded the internal and the external life of the people. Women hold an important place in it. The women who lived in harmony with everything, including virtue, morality, love, pleasure and nature became the base of Sangam literature. They became the pillars of Sangam literature as friends, leaders, mothers and nurses. The social contribution of women is immense in many ways. The Sangam poems are not only special because they were composed with women in mind. The special thing is that many women composed the poems. Women are also as brave as men. Women of the Sangam period shine as brave, motherly, responsible, dutiful and courageous and as protectors of culture. Their lives are admirable. Fear, modesty, shyness and cultivation are the qualities that make women excel in character. Sangam literature is a document that identifies civilization, culture, society, lifestyle, politics, etc. It is a great blessing for Tamils. This article examines the place of women and their personalities in the lives of the people where men and women lived together. Research also shows that there is no evidence that Sangam women were barred from education. The Sangam songs provide evidence of the existence of more than 40 female poets in Sangam literature. When one looks at those songs, we see their ability to clearly explain situations such as life, social welfare, the vision of the future, inner love, heroism, the desire for independence, happiness, sorrow and the scholarly quality of the songs. They had a great education. In this article, an interpretive approach has been adopted to explain such messages from Sangam poems.*

**Keywords:** Literature, Sangam, Women, Brave, Quality, Society.

## References

[1] Suyambu, P. Dr. *Tamil Ilakkiya Varalaru*. Bharathi Publishing House, Rajiv Nagar, Vetiyaanvilai - 627657, 2011.
[2] Tamilannal. *Puthumai Nokil Tamil Ilakkiya Varalaru.* Meenakshi Bookstore, Mayura Complex, 48, Thanappa Mudali Street, Madurai - 625001, 2022.

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

[3] Nachinarkiniyar. *Tolkappiyam: Yezhuthathigara Mulamum Nachinarkiniyar Uraiyum.* Saraswathi Mahal Library, Thanjavur, 1993.
[4] Nagarajan, V. *Pathuppattu I (Perupanatruppadai).* New Century Book House, Chennai-600098, 2007.
[5] Balasubramanian. *Natrinai (Moolamum Uraiyum).* New Century Book House, Chennai-600098, 2014.
[6] Balasubramanian, K. V. *Sanga ilakkiya Moolamum Uraiyum.* New Century Book House, Chennai-98, 2014.
[7] Perumal, A, K. & Sreekumar, S. *Tamil Ilakkiya Varalaru*. Sudarsan Books Manimedai Kilpuram Nagercoil 629001, 2014.
[8] Varadarasanar, M. *Thirukkural.* Tirunelveli South Indian Saiva Siddhanta Book Publishing Association, 1912-1974.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

**Pandian Journal of Women's Studies**
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

# சங்க இலக்கியங்கள் காட்டும் பெண்களின் பண்பு நலன்கள்

**அ. அருண் பெஜோ**, முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் உயராய்வு மையம், தெ.தி இந்துக்கல்லூரி, நாகர்கோவில், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0170-7230**
**முனைவர் பா. ம. ஜெயகலா**, இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, தெ.தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில், திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டது, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-0736-0047**
**DOI: 10.5281/zenodo.14744443**

**ஆய்வுச் சுருக்கம்**

*மனித சமூகம் மேன்மையுற வாழ்வதற்கென்றே அமைந்தவை இலக்கியங்கள் இலக்கியங்கள் மனித வாழ்விலிருந்து தோன்றினாலும் மனிதனை பட்டைதீட்டி செம்மையாக வாழ வழிகாட்டியாகத் திகழ்கின்றன. தமிழ் இலக்கியங்களின் மணிமகுடம் சங்க இலக்கியங்கள். இலக்கியம் வாழ்க்கையின் பிரதிபலிப்பு என்றால் சங்க இலக்கியங்கள் வளர்ந்து சிறந்த ஒரு தமிழ்ச் சமூகத்தின் பிரதிபலிப்பாக விளங்குகிறது. மனிதன் தன் வாழ்நாளின் ஒவ்வொரு கட்டங்களிலும் பின்பற்றி நடக்க வேண்டிய கூறுகளை, தலைமைப் பண்புகளை எடுத்துக் கூறுவதோடு, சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து மனிதன் மனிதனாக வாழவும் மனிதன் சக மனிதனை மதிக்கவும், மனித குலத்திற்கு வழிகாட்டுதல் மற்றும் நம்பிக்கையைத் தருவதிலும் இலக்கியங்கள் முக்கியப் பங்காற்றுகின்றன. அவ்வகையில், மனித குல வளர்ச்சிக்கும். மலர்ச்சிக்கும் அடிப்படையாக விளங்கும் மனித மாண்புகளை உருவாக்கும் ஆளுமைச் சிந்தனைகளை இலக்கியங்கள் தன்னுள் கொண்டு விளங்குகிறது. சங்க இலக்கியங்கள் அக, புற வாழ்க்கையை எக்காலமும் கொண்டாடும் வகையில் பதிவு செய்து வைத்திருப்பதால் அன்றைய காலத்தை ஒரு பொற்காலமாகக் கொண்டுகிறோம். அதில் முக்கியமான இடத்தைப் பிடித்திருப்பவர்கள் பெண்களே அறம், மறம், காதல், இன்பம், இயற்கை என எல்லாவற்றோடும் இணைந்து வாழ்ந்த பெண்கள் தனித்திறன் பெற்றவர்களாக விளங்கியதால் சங்க இலக்கியங்களின் ஆணி வேர்களாக மாறினர் தோழி, தலைவி, நற்றாய், செவிலித்தாய் எனப் பல நிலைகளிலும் பெண்களின் சமூகப் பங்களிப்பு அளப்பரியது. சங்கப் பாக்கள் பெண்களை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டிருத்தல் மட்டுமல்ல சிறப்பு. பெண்களே பாக்களை இயற்றியமைதான் பெரும் சிறப்பு. பெண்கள் இல்லற வாழ்க்கை மேம்பாட்டில் மட்டுமல்ல, ஆண்களுக்கு இணையான வீரத்திலும் மேம்பட்டிருத்தலோடு. சீரிய நோக்குடன் திகழ்ந்தமை அவர்களின் ஆளுமைக்குத் தனிச் சான்றாகத் திகழ்கிறது. முகவுரை 'பெண்கள்' நடமாடும் பிரம்மாக்கள் தாயுள்ளம் கருணை, அன்பு, மென்மைத் தன்மையோடு இருப்பவர்கள் எனவே தான் கவிமணி "மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டும்மா" என்றார். இலக்கியங்கள் சமூகத்தில் நடைபெறுகின்ற நிகழ்வுகளை பதிவு*

*செய்யும் வரலாறாகப் பார்க்கப்படுகிறது. அவ்வகையில் காலந்தோறும் பெண்கள் கடந்து வந்த வரலாற்றைப் புரட்டிப் பார்க்கும்போது அது பெரும் பிரம்மிப்பைத் தருவதாகவே அமைந்து காணப்படுகிறது. இலக்கியப் படைப்பாளர்கள் பெரும்பான்மையோர் ஆண் படைப்பாளர்களாக இருந்து வருகின்றபோதிலும் பெண்ணினத்தைக் குறித்தப் படைப்புகளே அதிகம். பெண் போகப் பொருள் அல்ல. பேராற்றலும், தாய்மைத் தன்மையும். பொறுப்பும், கடமையும், வீரமும் வாய்ந்தவளாகவும் பண்பாட்டைக் கட்டிக்காப்பவளாகவும் சங்க கால பெண்கள் மிளிர்ந்தனர் அவர்களின் வாழ்வு போற்றத்தக்கதாய் இருந்தது. அச்சமும், மடமும், நாணமும், பயிர்ப்பும் பெண்கள் குணத்தை மேன்மையுறச் செய்யும் அணிகளாகத் திகழ்ந்தன. சங்க இலக்கியம் தனிச்சிறப்பும். தனித்தன்மையும் பெற்ற ஒப்பற்ற களஞ்சியம். நாகரிகம், பண்பாடு, சமூகம், வாழ்வியல், அரசியல் போன்றவற்றை அடையாளப்படுத்தும் ஆவணமாக சங்க இலக்கியம் திகழ்வது தமிழர்களுக்கு வாய்த்த பெரும்பேறு. மக்களின் வாழ்வியலைக் கூறுமிடத்து ஆடவரும் மகளிரும் இணைந்து வாழ்ந்த வாழ்வியலில் மகளிருக்கான இடம் அவர்களின் ஆளுமை எப்படி இருந்தது என்பதை இக்கட்டுரை ஆய்கிறது. ஆய்வு நெறிமுறைகள் சங்க பெண்கள் கல்வி கற்றதாகவோ, கல்வி கற்க தடையிருந்ததாகவோ சான்றுகள் இல்லையாயினும் 40க்கும் மேற்பட்ட பெண்பாற்புலவர்கள் இருந்தமைக்கான சான்றுகளைச் சங்கப்பாடல்கள் தருகின்றன. அந்தப் பாடல்களைப் பார்க்கும் போது, வாழ்க்கையின் சிறப்பம்சங்கள், சமூக நலன் எதிர்காலப் பார்வை, தங்கள் உள்ளக்கிடக்கை காதல், வீரம், தனிமைத்துயர் உரிமை வேட்கை மகிழ்ச்சி. துயரம் போன்ற நிலைப்பாடுகளை அவர்கள் தெளிவாக விளக்கும் ஆற்றலைப் பார்க்கும் போதும், அப்பாடல்களின் புலமை நயத்தைப் பார்க்கும் போதும் அவர்கள் பெரும் கல்வி அறிவு பெற்றிருந்தமை புலனாகும்.*

**குறிப்புச்சொற்கள்:** இலக்கியம், சங்கம், பெண்கள், துணிச்சல், தரம், சமூகம்.

### ***தொல்காப்பியம்* காட்டும் பெண்**

தமிழுக்கு எழுத்து மற்றும் சொல் இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் வாழ்க்கைக்கும் இலக்கணம் வகுத்துள்ளது. பெண்ணுக்கான இலக்கணம், ஆணுக்கான இலக்கணம் என ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட நடத்தையறக் கோட்பாடுகளைச் சுட்டுகிறது. தொல்காப்பியர் தலைவன் தலைவிக்குரிய பண்புகளை விளக்கியுள்ளார்.

**அச்சமும் நாணும் மடனும்...**
**பெண்பாற்குரிய என்ப (தொல். கள., 96)**

தலைவிக்கு இம்மூன்றும் கேடயங்கள். தலைவியின் பல்வேறு குணநலன்களை பொருளதிகாரத்தில் பல இடங்களில் பதிவு செய்துள்ளார்.

**செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பாலான (தொல்., 206)**

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

தமிழர்களின் மரபு காக்கும் தன்மையுடையவர்களாக அன்றைய பெண்கள் இருந்தமை இதன் மூலம் புலனாகும். அடக்கமும் அமைதியும் மனம் கோடாமையும், நல்லன பேசலும் அறிவும், உள்ளக் கருத்தை அறிந்து நடத்தலும் தலைவிக்கு இருக்க வேண்டியகுணநலன்களாக பதிவு செய்யப்பட்டுள்ளது. கற்பு என்பது பெண்ணின் கவசமாகும் இதனை,

**உயிரினும் சிறந்தன்று நாணே நாணினும்**
**செயிர்தீர் காட்சி கற்பு சிறந்தன்று (தொல். கள., 23)**

வீரத்தை வாழ்வாகக் கொண்ட பெண்கள் சங்க மகளிர் வீரம் வாய்ந்த ஆண்மகனையே திருமணம் புரிய விரும்பினர் முல்லைத் திணைப் பாடல்களில் காணலாகும் ஏறு தழுவுதல் நிகழ்வு இதற்கு சான்றாதாரமாக அமைகின்றது.

**கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்**
**புல்லாளே ஆய மகள் (கலி., 103)**

அச்சமின்றி தினைப்புனம் காத்த பெண்ணின் வீரம் குறிஞ்சிப் பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**புலி அஞ்சு இதணம் ஏறி, அவண்**
**சாரல் சூரல் தகை பெற வலந்த**
**தழலும் தட்டையும், குளிறும், பிறவும்,**
**கிளி கடி மரபின ஊழ் ஊழ் வாங்கி,**
**உரவுக் கதிர் தெறூஉம் உருப்பு அவிர் அமயத்து (குறிஞ்சி., 41-45)**

தினைப்புனம் காக்கும் பணிகளில் பெண்கள் ஈடுபட்டமையைக் கூறுமிடத்து, புலிகளும் ஏறுவதற்கு அஞ்சும் உயரமான பரண்களில் இருந்து பறவைகளை விரட்டினர் என்பது சுட்டப்பட்டுள்ளது. சங்க கால மகளிர் வீரத்துடன் விவேகமும் பெற்றிருந்தனர். சொல்லாலும் செயலாலும் ஒருவரின் மனதைப் பண்படுத்தும் திறமையும் ஆற்றலும் பெற்று விளங்கினர். இயல், இசை, நாடகம் என முத்துறைகளிலும் தேர்ச்சி பெற்றவர்களாக விளங்கினர். போர், தூது, காவல், பொருளீட்டல் ஆண்களுக்கானவை மட்டுமன்று. பெண்களும் இவற்றில் சிறந்து விளங்கினர். தங்கள் குடிப்பெருமையை காப்பதையும், பண்பாட்டினைப் போற்றுதலையும் முதன்மையாகக் கொண்டனர். தந்தை கணவன், பால்மணம் மாறாத பாலகன் என தங்கள் வீட்டு ஆடவர்களைப் போருக்கு அனுப்பி நாட்டின் மீதான பற்றை வீரச் சிந்தனையை வளர்த்தனர். இச்செய்திகள் புறநானூற்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

போர்த்தொழில் புரியும் ஆடவர்கள் தங்கியிருக்கும் பாசறையில் பெண்கள் பணிபுரிந்த செய்திகள் முல்லைப்பாட்டில் காணப்படுகிறது. பாசறைப் பெண்டிர் பாவை விளக்குகளில் நெய் இட்டு விளக்கேற்றினர். தங்கள் உடையொடு இரவைப் பகலாக்கும் அளவுக்கு ஒளி பொருந்திய வாளை கட்டியிருந்தனர்.

**திண் பிடி ஒள் வாள் அளவுக்கு**

**விரவு வரிக் கச்சிற் பூண்ட மங்கையர் (முல்லை., 46, 47)**

ஆடவர்களுக்குத் துணையாக பாசறையில் காவல் பணி புரிந்திருக்கின்றனர். பகைவர் நாட்டுப் பெண்கள் சிறை செய்யப்பட்டுக் கொண்டு வரப்படும் பொழுது அவர்களையும் காவல் தொழிலில் ஈடுபடுத்தியதாக பட்டினப்பாலை கூறுகிறது. அவர்கள் 'கொண்டி மகளிர்' என அழைக்கப்பட்டனர். அரசியலில் மன்னர்களுக்கு அறிவுரையும் ஆலோசனையும் கூறவும், போரில் அமைதி ஏற்பட அதியமானுக்காக நாடு விட்டு நாடு தூது சென்றார் ஔவையார்.

**அன்பு அறிவு ஆராய்ந்த சொல்வன்மை**
**தூதுரைப்பார்க்கு இன்றியமையாத மூன்று (குறள்., 682)**

என்னும் குறளுக்கு இலக்கணமாகத் திகழ்ந்தவர் ஔவையார்.

**இவ்வே பீலியணிந்து மாலை சூட்டி**
**கண்திரள் நோன் காழ் திருத்தி, நெய் அணிந்து (புறம்., 95)**

உன்னுடைய படைக்கலங்கள் புதியதாக அழகுடன் மிளிர்கின்றன என தொண்டமானை புகழ்வது போல இகழ்கின்றார் ஒரு பெரும் போரை நிறுத்திய ஔவையின் அறிவாற்றலும் சந்து செய்விக்கும் திறனும், சங்க மகளிர் அரசியல் நுணுக்கங்களை அறிந்திருந்தமையை நமக்குப் புலப்படுத்துகிறது. பெண்பாற் புலவரான காக்கைப் பாடினியார் நச்செள்ளையார், சேரமன்னர் வரலாறு கூறும் பதிற்றுப்பத்தில் ஆடுகோட்பாட்டு சேரலாதனின் கொடை வீரம், அருள் ஆகிய பண்புகளை பலபட பாராட்டியவர். சேரலாதன் ஆடல் பாடல்களில் அதிக கவனமும் ஈடுபாடும் செலுத்திய போது அவனுக்கு அமைச்சர் நிலையில் நின்று அறிவுரை கூறுகிறார். அரசே! அரசாட்சியை விட்டு இன்பத்தில் நாட்டமுடையவனாய் இருந்தால் நின் பகைவன். இவ்வேந்தன் அறிவிலே மெல்லியன் போலும் எனக் கருதி விடுவர். அவ்வாறு பகைவர் எண்ணுவதற்கு நீ இடம் கொடுத்தல் கூடாது என்று அறிவுறுத்துகிறார். பெருஞ்சேரலாதனுக்கும் வளவனுக்கும் இடையே நடைபெற்ற போரில், வளவன் எய்த அம்பு சேரனின் மார்பு வழி முதுகை அடைந்து முதுகில் புண்பட்டது. சேரன் நாணமுற்று வடக்கிருந்தான் வளவன் வெற்றியடைந்ததை கொண்டாட அதனை, வெண்ணிக்குயத்தியார் என்னும் பெண்பாற்புலவர்.

**நின் ஆற்றல் தோன்ற வென்றோய்!**
**நின்னினும் நல்லன் அன்றே...**
**மிகப் புகழ் உலகம் எய்தி.**
**புறப்புண் நாணி, வடக்கிருந்தோனே? (புறம்., 66)**

சேரலாதன் புறப்புண்ணிற்கு நாணி வடக்கிருந்தமையால் கரிகால் வளவனாகிய உன்னைவிட நல்லவன் எனப் பாடும் துணிச்சல், ஆளுமையின் மிக உயரிய பாங்காய் பார்க்கப்படுகிறது. மறக்குடி மகளிர் தங்கள் வீட்டு ஆடவர்களை போருக்கு துணிவுடன் அனுப்பினர். போர்க்களத்தில் வீரம் காட்டிப் போர் புரிவதை அறிந்து மகிழ்ந்தனர். விழுப்புண்

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

ஏற்பட்டால் அதைப் பெருமையாகக் கருதினர் புறமுதுகிட்டான் என்ற தகவலை அறிந்தால் அந்நிலையைத் 'தூற்றும் தாய்' சங்க புறப்பாடல்களில் காட்டப்படுகிறாள். தன் மகனாகிய வீரனைப் பெற்ற தாய் மிக்கப் பெருமையுடனும் இறுமாப்புடனும் கூறுகிறாள் இவ்வயிறு சாதாரணமானதன்று.

**புலி சோர்ந்து போகிய கல் அளைபோல**
**ஈன்ற வயிறோ இதுவே (புறம்., 86)**

என்னும் புறப்பாடலில், புலி இருந்து பின் பெயர்ந்து சென்ற கற்குகை போன்றது. ஈன்ற இந்த வயிறு. அதுபோன்று வீரம் விளைவிக்கும் ஆற்றலை உடையவன் தன் மகள் எனப் பெருமிதத்தால் தாய் கூறுவதை விளக்குகிறது. கணவன் போருக்குச் செல்லும் போது அவனுக்கு மாலை அணிவித்து வெற்றியுடன் திரும்பி வருமாறு வாழ்த்தி அனுப்பும் வீரம் மிகுந்த பெண் புறநானூற்றில் காட்டப்படுகிறாள். "கொடுங்குழை மகளிர் கோதை சூட்டி" போருக்கு ஆவர்களை அனுப்பும் மறத்தை இங்கு காணலாம். கற்பு பேணுதல் பொதுவாக இச்சமூகம் போதிக்கும் கற்பு சார்ந்த விஷயங்கள் பெண்களுக்கு மட்டும் தான். பெண்களுக்கு விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் ஆடவர்களுக்கு விதிக்கப்படவில்லை. ஆடவர்கள் பரத்தையர்கள் உறவு பற்றிக் கூறும் இலக்கியங்கள் ஏராளம், அதைக் கண்டித்தாலும் அன்றைய சமூகம், ஒழிப்பதற்கு பெரிய முயற்சிகள் ஏதும் எடுக்கவில்லை என்பதே உண்மை. பரத்தமை மேற்கொள்ளல் ஓர் ஒழுக்கமாகவே பார்க்கப்பட்டது. கலித்தொகை, பெண் கற்பைக் கூறுமிடத்து. **வடமீன் போல் தொழுதேத்த வயங்கிய கற்பினள் (கலி., 2)** அருந்ததியைப் போல எல்லோராலும் தொழுது போற்றும் வண்ணம் விளங்குகின்ற பெரும் கற்பினை உடையவள் தலைவி. அந்த கற்பு எத்தகைய வலிமையுடையது எனில், **அருமழை தால் வேண்டின் தருகிற்கும் பெருமையளே (கலி., 39)** என கலித்தொகை இயம்புகிறது. இயற்கையைக் கூட தன் கட்டுக்குள் வைக்கும் அளவிற்கு பெண்ணின் கற்பு, உயரியதாகப் பேசப்பட்டுள்ளது. இறைநிலையை கற்புக்கு ஈடாகப் பார்க்கும் தன்மை இங்கே வெளிப்படுகிறது. வள்ளுவரும்.

**தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்**
**பெய்யெனப் பெய்யும் மழை (குறள்., 55)**

அரிய மழையைக் கூட தருவிக்கும் ஆற்றல் பெண்ணிடம் உருவாக, கற்பே காரணம் என்பதை மேற்கண்ட குறள் தெளிவாக்குகிறது. அதுபோல் பொருளுக்கு ஆசைப்பட்டு ஒழுக்கத்தை இழக்க சங்க மகளிர் விரும்பாத உயரிய தன்மை கலித்தொகையில் காணக்கிடக்கிறது. இவ்வுலகத்தையே பரிசாகப்பெறுவதாக இருந்தாலும் மனதால் நினைத்த தலைவனை விட்டு வேறொரு மணம் புரிய நினைத்ததில்லை. அது தங்கள் குடித்தன்மையன்று என்பதை உணர்ந்திருந்தனர்.

**விரிநீர் உடுக்கை உலகம் பெறினும்**
**அருநெறி ஆயர் மகளிர்க்கு இருமணம்**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

**கூடுதல் இல்இயல்பு அன்றே (கலி., 114)**

அதுபோன்று இப்பிறப்பு மட்டுமல்ல மறு பிறப்பினைப் பற்றிய சிந்தனைகள் கூட பெண்களுக்கு கற்பு நெறி சார்ந்தவையாகவே இருப்பது வியப்புக்குரியது.

**இம்மை மாறி மறுமை ஆயினும் நீயாகியர்**
**என்கணவனை யானாகியர் நின்நெஞ்சு நேர்பவளே (குறுந்., 49)**

இந்த பிறவியில் தனக்கு வாய்த்த கணவனே மறுபிறப்பிலும் கணவனாக வரவேண்டும் என விரும்பிய பெண்களின் மனநிலை இங்கு தெளிவாகச் சுட்டப்பட்டுள்ளது. இல்லற நிர்வாகம் சங்கப் பெண்கள் இல்லற நிர்வாகத்தில் மேம்பட்டவர்களாகத் திகழ்ந்தனர். குடும்ப உறுப்பினர்களை மட்டுமின்றி சுற்றத்தையும் காக்கும் தன்மை பெண்களிடம் இருந்திருக்கிறது. விருந்தோம்பல் பண்பினை எல்லா பெண்களும் உயிரினும் மேலானதாக மதித்துப் போற்றியிருக்கின்றனர். சங்க இலக்கியப் பாடல்கள் வழி விருந்தோம்பல் பண்பாட்டை நோக்குமிடத்து, பெண்களின் உயிர் பாதுகாக்கும் தாய்மைச் சிந்தனை புலனாகிறது.

**விருந்து உண்டு எஞ்சிய மிச்சில் பெருந்தகை**
**நின்னோடு உண்டலும் புரைவது என்று**
**ஆங்கு அறம் புணை ஆகத் தேற்றிப் பிறகு மலை (புறம்., 206-208)**

எல்லோருக்கும் உணவளித்து, எஞ்சியதை உண்டு வாழும் இல்லற வாழ்க்கைச் சிறப்பினை இப்பாடல்வழி அறியமுடிகிறது. விதைக்கு என வைத்திருக்கும் தினையைக் கூட விருந்தினருக்குக் கொடுத்து உபசரித்து மகிழும் பாங்கினை,

**வரகும் தினையும் உள்ளவை எல்லாம்**
**இரவல் மாக்கள் உணக்கொளத் தீர்ந்தெனக்**
**குறித்துமாறு எதிர்ப்பை பெறாஅ மையின்,**
**குரல்உணங்கு விதைத்தினை உரல்வாய்ப் பெய்து (புறம்., 333. 9-12)**

என்ற அடிகள் வெளிப்படுத்துகிறது. அதாவது, வரகு தினை முதலிய உணவுப் பொருட்கள் இரவலர்களுக்கு வழங்கப்பட்டதால் தீர்ந்து விட்ட காரணத்தால், விதைப்பதற்காக வைத்திருந்த விதைத்தானியங்களை உரலில் இட்டு இடித்து உணவு செய்து கொடுக்கிறாள் ஒரு இல்லத் தலைவி. இத்தகைய இல்லறச் சிறப்பை மேற்கொண்ட சங்கப் பெண்களே விருந்தோம்பல் என்னும் பண்பாட்டை உருவாக்கியவர்கள். சங்க இலக்கியங்களில் தலைவன் தலைவி பிரிவு குறித்து அதிகமாக பேசப்படுகிறது. அவற்றுள் தலைவன் தலைவியை விட்டு, நாடு காவல்பிரிவு, தூதிற் பிரிவு, பொருள் வயிற் பிரிவு, ஓதற்பிரிவு, பரத்தையர் பிரிவு எனப் பல காரணங்களுக்காகப் பிரிந்து செல்கிறான். இந்தப் பிரிவுகளுக்கன மிகக்குறைந்த காலம் என்று பார்த்தாலும் ஓராண்டு என்று கூறலாம். அந்த காலக்கட்டத்தில் தலைவி இல்லற நிர்வாகத்தை மிகச் சிறப்பாக நடத்தி இருக்கிறாள் என்பது சங்கப் பாடல் வழி நமக்குக் கிடைத்த பெண்களின் நிர்வாக ஆளுமை ஆகும். தலைவனைப் பிரிந்த தலைவி அவன் பிரிவை நினைத்து

வருந்துகிறாள். அந்த வருத்தம் கூட தலைவியின் மிகப்பரந்த அறிவை வெளிப்படுத்துவதாகவே அமைகிறது. தலைவி தலைவன் செல்லும் வழியின் வழியின் தன்மையை நினைத்து கவலைப்படுகிறாள். அவன் செல்லும்காலம் செல்லும் வழி, காலத்தின் அடிப்படையில் அவ்வழியின் தன்மை என்ன என்பதை நினைத்துத் தலைவி கலங்குகிறாள் எனில் பருவநிலை, காலமாற்றங்கள் குறித்த அறிவும். பரந்துப்பட்ட பயண வழிகளை எல்லாம் அவள் அறிந்து வைத்திருந்தமையும் புலனாகும். விருந்தினர்களை உபசரித்தலில் செல்வந்தர் வீட்டுப் பெண்ணாயினும், வறுமையில் வாடுபவளாக இருப்பினும் அனைவருமே பெருவிருப்புடன் திகழ்ந்தனர். இல்லம் தேடி வருவோரை முகமலர்ச்சியுடனும் விருப்பத்துடனும் வரவேற்று உபசரித்தலை பெண்கள் முக்கியக் கடமையாகக் கருதினர்.

**அமிழ்து அட்டு ஆனா கமழ்குய்**
**அடிசில் வருநர்க்கு வரையா வசை**
**இல் வாழ்க்கை மகளிர் மலைத்தல் அல்லது மள்ளர் (புறம்., 10)**

பாடல் குலமகளிர் விருந்தோம்பிய திறத்தை எடுத்துக்காட்டுகிறது. அவர்கள் உணவு என்னும் சமைத்த விதத்தைப் பாராட்டும் போது அமிழ்தத்தையே வென்ற சுவையும், உண்ண உண்ண அடங்காத மணம் நிறைந்த உணவாக படைத்த விருந்து அமைந்தது. அத்தகைய உயரிய உணவினை அளவிறந்து அளித்து மகிழும் குற்றமற்ற வாழ்க்கையை உடையவர்கள் மகளிர் உணவுப் பொருள் குறைவாக இருந்தாலும் வந்த விருந்தினரை வரிசைப்பட அமர வைத்து முறையிட்டு வழங்கும் கூர்மதியையும் கொண்டிருந்தனர் சங்கப் பெண்கள். விருந்தினர்களை உறவினர்களைப் போல் கருதி அவர்களை உபசரித்த விதத்தை

**இளையரும் புரவியும் இன்புற,**
**நீயும் இல் உறை நல்விருந்து அயர்தல்**
**ஒல்லுதும் பெரும! நீ நல்குதல் பெறினே (அகம்., 300)**

என்னும் அகநானூற்றுப் பாடல் குறிப்பிடுகிறது. அதாவது, தோழி தலைமகனிடம், நீ தொலைவிலிருந்து வரும் புதியவர் போல் எம் வீட்டுக்கு வருவாயாக எம் வீட்டாரும் எதிர்கொண்டு வரவேற்பர் எம் இல்லத்தே தங்கி இன்புறுவாயாக யாமும் நும்மை விருந்தாக ஏற்றுப் பேணுதல் செய்து போற்றுவோம் எனக் கூறுகிறாள். பாலைநிலம் பாழ்பட்ட இடம் அங்கே வளம் என்பது மிகக் குறைவு. ஆனால் இல்லை என்னும் வார்த்தையை விரும்பாத பாலைநிலை எயிற்றியர்கள், தங்களை நாடி வரும் விருந்தினர்களுக்குப் புளிக்கறியிட்ட சோற்றினையும் வேக வைத்த காட்டுப் பசுவின் இறைச்சியையும் வழங்கினர். என்பதை.

**எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு**
**தேமா மேனிச் சில்வளை ஆயமொடு ஆமான்**
**சூட்டின் அமைவரப் பெறுகுவிர் (சிறு., 175-177)**

**Volume 5, Special Issue 1 (1), January 2025** **E-ISSN: 2583-715X**

என்னும் சிறுபணாற்றுப்படை அடிகள் விளக்குகிறது. தன் குலம் வறுமை உற்ற போது, தன் கணவனோடு சேர்ந்து அவன் துன்பத்தில் தோள் கொடுக்கும் இல்லறப் பண்பு சங்கப் பெண்ணின் தனிப் பெரும் ஆளுமையாகப் பார்க்கப்படுகிறது. ஒரு காலத்தில் வளமான வாழ்க்கை வாழ்ந்த தலைவி, தன் கணவன் வீட்டில் வறுமையில் வாடுகின்ற சூழலிலும் அதனை ஏற்றுக் கொண்டு நிறைவாக வாழும் சூழ்நிலையை,

**ஏவல் மறுக்கும் சிறுவினையாட்டி அறிவும்**
**ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனர் கொல்?**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக் கொடுத்த**
**தந்தை கொழுஞ்சோறு உண்ணாள் (நற்., 110)**

என்னும் நற்றிணைப் பாடல் எடுத்தியம்புகிறது.

சங்க மகளிர் நுண்கலைகளில் மிகுந்த திறமை உள்ளவர்களாகவும், ஆற்றல் உள்ளவர்களாகவும் திகழ்ந்துள்ளனர். இசையறிவுடன் அழகியல் உணர்வும் மிகுந்தும் காணப்பட்டனர். நாட்டியக் காலையில் தேர்ச்சி பெற்றிருந்தனர். குரவைக் கூத்து, ஆய்ச்சியர் குரவை, துணங்கைக் கூத்து போன்ற கலைகளையும் கற்றிருந்தனர். பாடினி, விறலியர் கோடியர், ஆடு மகளிர் போன்றவர்கள் ஆடல், பாடலுடன் இசைக் கருவிகளை இசைத்து தங்கள் வாழ்வாதாரத்தை செம்மைப்படுத்தினர். ஈகைப்பண்பு குமணவள்ளலிடம் பெரும் செல்வம் பெற்றுவந்த பெருஞ்சித்திரனார். தன் மனைவியிடம் பொருளை எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழுமாறு கூறுகிறார்.

**நின் நயந்து உறைநர்க்கும். நீ நயந்து**
**உறைநர்க்கும் பல்மாண் கற்பின் நின்**
**கிளைமுதலோர்க்கும் கடும்பின் பசிதீர யாழ**
**நின் நெடுங் குறியெதிர்ப்பை நல்கியோர்க்கும்**
**இன்னோர்க்கும் என்னாது, என்னோடும் சூழாது**
**வல்லாங்கு வாழ்தும் என்னாது நீயும் எல்லோர்க்கும்**
**கொடுமதி மனை கிழவோயே (புறம்., 163)**

என்னும் புறப்பாடல் தரும் செய்தி மனிதநேயத்தின் அடிப்படையாயினும் தலைவன் கொண்டு வந்த செல்வத்தை மனைவியிடம் கொடுத்து எல்லோர்க்கும் வாரி வழங்கச் சொல்வது அவளின் நிர்வாகத்தின் மேலிருந்த நம்பிக்கை மற்றும் பெண்ணின் ஆளுமைச் சிறப்பே ஆகும். கிடைத்த பொருளை சேர்த்து வைக்காமல் வறுமையில் வாடுவோருக்குக் கொடுத்துஎல்லோரும் இன்புற்று வாழ நினைத்தும் மனப்பக்குவம் மனித நேயத்தின் வெளிப்பாடு.

**பிறர்க்கு என முயலும் பேரருள் நெஞ்சமொடு (நற்.,186. 8)**

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

என்னும் நற்றிணை அடி மனிதனுக்கு இருக்க வேண்டிய மாண்பினைச் சுட்டுகிறது. இறைவழிபாட்டின் போது கூட தனக்கென சுயநலம் கொண்டு கேட்காத மானுடப் பண்பு காணப்பட்டது.

**யாஅம் இரப்பவை பொருளும் பொன்னும் போகமும் அல்ல**
**நின்பால் அருளும் அன்பும் அறனும் மூன்றும் (பரி. 5. 78-80)**

என்னும் பரிபாடல் அடிகள் மனிதனின் பக்குவப்பட்ட பொது நலத்தை எடுத்துக்காட்டுகிறது. அரசனும், சாதாரண குடிமக்களும் கொடை வழங்குதலை தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாகக் கொண்டனர். ஆண்மகன் மட்டுமின்றி பெண்களும் தங்கள் விரும்பிய வண்ணம் இரவலர்க்கு கொடுக்கும் உரிமை உடையவர்களோகவோ விளங்கினர்.

**புன்தலை மடப்பிடி பரிசிலாக, பெண்டிரும்**
**தம்பதம் கொடுக்கும் வண்புகழ் (புறம்., 151. 4,5)**

மேற்கண்ட பாடலடிகள் மூலம் சாதாரண கொடையை வழங்கவில்லை. யானைகளை பரிசளித்தனர் பெண்கள் என்னும் சிந்தனை நம்மை வியக்க வைக்கிறது. வாழ்த்தும் மரபு ஒருவரிடம் ஒருவர் அன்பு பாராட்டி வாழ்த்துவது உயர்ந்த செயலாகும். அது மகிழ்ச்சியைத் தருவதோடு மனநிறைவையும் தரும். சுற்றி இருப்போரிடையே இன்பநிலையை ஏற்படுத்தும். நற்சொல் கூறிய அயல் மனையாள் ஒருத்தி அமுதம் உண்ணப் பெறுவாளாக என வாழ்த்தும் மரபினை குறுந்தொகை, **"அமிழ்தம் உண்க நம் அயல் இலாட்டி" (குறுந்., 201)** என்று கூறுகிறது. செவிலித் தாய் நற்சொல் கூற அது கேட்ட தோழி உணவினை பகுத்துக் கொடுப்பவர் பெறும் பெரும்பயனைப் நீ பெறுவாயாக என்பதை, **"பெரும் பெயர் உலகம் பெறீஇயரோ அன்னை" (குறுந்., 83)** என வாழ்த்துகிறான். துறக்க உலகமும் இவ்வுலக இன்பமும் பெறுவாய் என்பது இதன் பொருள் ஆகும். அன்பு இனியன பேசுதலோடு, அன்பால் அனைவரையும் ஆள்வது மிகப் பெரிய ஆளுமை. மனிதனுக்கு மிகப்பெரிய ஆயுதமாக விளங்குவது நாக்கு மனிதன் வாழவும் வீழவும் நாவினால் தோன்றும் சொல் அடிப்படையாக அமைந்து விடுகிறது. எனவே நற்சொல் பேசி நாவைப் பாதுகாக்க வேண்டும் என்று கூறுகிறார் வள்ளுவர் அதற்கு "ஆறாது நாவினால் சுட்ட வடு' எனக் காரணமும் கூறுகிறார்.

**கிழவிர் போலக் கேளாது செழீஇ**
**சேட்புலம்பு அகல இனிய கூறி (மலைபடு., 158, 159)**

என்னும் மலைபடுகடாம் அடிகள், தங்கள் வீட்டிற்குப் புதிதாய் வருபவர்களை பல நாட்களுக்கு முன்பே உறவுடையவர் போல இனிமையான மொழிகளைப் பேசி விருந்து படைத்தலைக் கூறுகிறது. மக்கட் பண்புகளுள் முதன்மை பெறுவது அன்பு. மனித சமூகம் அன்பால் கட்டமைக்கப்பட வேண்டும். வள்ளுவர். "அன்பின் வழியது உயிர் நிலை" என அன்பின் வழியில் இயங்கும் உடம்பே உயிர்நின்று இயங்கும் உடம்பு என்கிறார். மனிதன் உயரிய ஆளுமைப் பண்புகளைக் கொண்டிலங்கவும், நலன் பேணவும் தன் வாழ்வில் முழு

வளர்ச்சியையும் பெற அன்பே அடிப்படையாக அமையும். சங்க இலக்கியத்தில் இல்லற அன்பு பேசப்படுகிறது. கணவனும் மனைவியும் ஒருவர் மீது இன்னொருவர் மாறாத அன்பு கொண்டு இயங்க வேண்டும். ஏனெனில் பகுத்தறிவும் ஆற்றல் வாய்ந்த மனித இனத்திற்கு அன்பு வலு சேர்க்கும் தன்மையதாகத் திகழ்கிறது. சங்கத் தலைவி, தலைவன் மீது கெண்ட அன்பு,

**இம்மை மாறி மறுமை ஆயினும்**
**நீயாகியர் எம் கணவனை யான்**
**ஆகியர் நின் நெஞ்சு நேர்பவளே (குறுந்., 49)**

என்னும் குறுந்தொகைப் பாடலால் விளக்கப்படுகிறது. அன்பினை. தலைவி தலைவன் மீது கொண்ட

**நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று**
**நீரினும் ஆர் அளவின்றே (குறுந்.,3)**

என மிக உயரியதாக வெளிப்படுத்துகிறாள். இவை தலைவியின் அன்பால் ஆளும் குணத்தை வெளிப்படுத்தும் சான்றுகளாகும். அறிவுரை பகர்தல், நெறிப்படுத்துதல் என்கின்ற வகையில் தனக்கான தனித்த ஆளுமைப் பண்பினை வெளிப்படுத்துபவளாக இருப்பவள் தோழி, தலைவியின் வாழ்க்கையின் ஒவ்வொரு படிநிலைகளிலும் தோழியின் வழிகாட்டுதல் மிக முக்கியமானதாக அமைகிறது. தோழியின் பல்வேறு கடமைகளுள் தலைவன் தலைவி செம்மையாக வாழ நெறிப்படுத்தும் பணியும் ஒன்று. தலைவனின் தவறை வெளிப்படையாகச் சுட்டும் தகுதி உடையவளாக தோழியே இருந்திருக்கிறாள். தலைவனின் பிரிவு, பரத்தமை ஒழுக்கம் போன்றவை தலைவியை பாதித்தல் என்பது இயல்பு எனவே அவள் துன்புறுகிறாள் ஆனால், தலைவன் தலைவி உறவில் உள்ள நெருக்கமான அன்பு நிலை தோழியையும் துயருற வைக்கிறது. தலைவியோடு சேர்ந்து அவளும் துன்பத்தை அனுபவிக்கிறாள். தலைவியின் துன்பக் கண்ணீரைத் துடைக்கும் கரம் தோழியுடையதாக இருந்தது. இதனை "கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்" என்னும் தொடர் மூலம் தொல்காப்பியர் விளக்குகிறார். சங்க இலக்கியங்களில் தோழி மிகப்பெரிய பொறுப்பை சுமப்பவளாக இருந்திருக்கிறாள். எனவே தான் மற்றெந்த கதாபாத்திரங்களைக் காட்டிலும் தோழி ஆளுமைத் தன்மையின் சிகரமாகப் பார்க்கப்படுகிறாள். சங்க கால மக்கள், பிறர் துன்புற தாங்கள் இன்புற்று வாழ விரும்பாத சீரிய வாழ்க்கையை விரும்பினர். இதனை. "பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளவர்" என்னும் புறநானூற்றுப் பாடலடி விளக்குகிறது. இத்தகைய மிகச் சிறந்த சமூகத்தில் வாழ்ந்த பெண்கள் தங்கள் வாழ்வியல் நடத்தை முறைகளில் பண்பட்ட தனித்த பாங்குகளை ஆளுமைக் கருவிகளாகக் கொண்டிருந்தனர் என்பதில் வியப்பேதும் இல்லை.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் பெண்களை தனித்துவம் உடையவர்களாக எடுத்துக் காட்டும் கருத்துப் பெட்டகங்கள் பெண்கள் தங்கள் ஆளுமை, அறிவு, செயல்பாடுகள் போன்றவற்றை

Volume 5, Special Issue 1 (1), January 2025 E-ISSN: 2583-715X

இச்சமூகத்திற்கு பல்வேறு தளங்களில் நின்று தங்கள் பங்களிப்பைச் செய்துள்ளனர். குறிப்பாக அவர்களின் சிறப்புகளையும், பங்களிப்பையும் இலக்கியங்கள் பதிவு செய்திருப்பது போற்றத்தக்கது. இத்தகைய பதிவுகள் பெண்கள் சமூகத்திற்குப் பெருமை சேர்க்கும் என்பதில் வியப்பில்லை.

**குறிப்புகள்**

[1] சுயம்பு, பெ. முனைவர். *தமிழ் இலக்கிய வரலாறு.* பாரதி பதிப்பகம், இராஜீவ் நகர், திசையன்விளை 627 657, 2011.

[2] தமிழண்ணல். *புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.* மீனாட்சி புத்தக நிலையம், மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001. 2022

[3] நச்சினார்க்கினியர். *தொல்காப்பியம்: எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும்.* சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், 1993.

[4] நாகராஜன், வி. *பத்துப்பாட்டு I (பெரும்பாணாற்றுப்படை).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600098, 2007.

[5] பால சுப்பிரமணியன். *நற்றிணை (மூலமும், உரையும்).* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-600 098, 2014.

[6] பாலசுப்பிரமணியன், கு,வெ. *சங்க இலக்கியம் மூலமும் உரையும்.* நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை-98, 2014.

[7] பெருமாள், அ. கா. & ஸ்ரீகுமார். எஸ். *தமிழ் இலக்கிய வரலாறு.* சுதர்சன் புக்ஸ், மணிமேடை கீழ்புறம், நாகர்கோவில், 629 001, 2014.

[8] வரதராசனார், மு. *திருக்குறள்.* திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், கழகவெளியீடு, 1912-1974

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.